# ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்

## பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழுவின் சிபாரிசுகள்

## 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற கூட்டம்

## எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு

## பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு

**2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு 05 ஆம் இலக்க குழு அறையில் நடைபெற்ற 97-வது கூட்டம்**

## ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்

| | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு முன்வைத்த சிபாரிசுகள் | பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு முன்வைத்த சிபாரிசுகள் தொடர்பான தற்போதைய நிலையும் மற்றும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் விடயம்<br><br>நிறுவகத்தினது சட்டத்தின் பிரகாரம் விவசாய விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சின் செயலாளர் பணிப்பாளர்கள் சபையின் தலைவராக இருத்தல் வேண்டும் என்றிருந்தும், இராஜாங்க அமைச்சரின் செயலாளர் அதன் தலைவராக பணியாற்றுவது பற்றி குழு வினவியது.<br><br>2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதிய 1986/6 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் தொடர்பான விடயம் இராஜாங்க அமைச்சரின் விடயப்பரப்பில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், இந்த தலைவர் பதவிற்கு இராஜாங்க அமைச்சரின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். | எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளும் வகையில் இது தொடர்பான சட்ட நிலைமை பற்றி சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து **ஆலோசனை பெறுதல்.** | சட்டமா அதிபரினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளுக்கு இணங்க விவசாய அமைச்சின் செயலாளர் பணிப்பாளர்கள் சபையின் தலைவராக தற்பொழுது பணியாற்றுகின்றார். |

| | | | |
|---|---|---|---|
| 02 | <u>உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்காமை</u><br><br>உள்ளகக் கணக்காய்வுப் பிரின் பணிகள் மேற்கொள்ளப்படாமையினால் ஏறக்குறைய 06 மாத காலத்தினுள் எந்தவிமான கணக்காய்வு விசாரணையும் வெளியிடப்பட்டிருக்காமை பற்றி குழு வினவியது.<br><br>2017 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் தொடர்பில் ஒரு பிரச்சினை எழுந்ததால், ஒரு விசாரணை நடத்தப்படும் வரை, அவரை சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், பொது நிருவாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான அறிக்கை தற்பொழுது கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் அதற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதாகவும் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் குறிப்பிட்டார். | இது தொடர்பில் விஷேட கவனத்தை செலுத்தி தேவையான நடவடிக்கையை எடுத்தல். | உள்ளகக் கணக்காய்வாளர் தொடர்பில் 2017 ஆம் ஆண்டு எழுந்த ஒரு பிரச்சினை (முறைகேடு) பற்றி அமைச்சினால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டு முறையான ஒரு தனி நபர் விசாரணையும் நடத்தப்பட்டுள்ளது. அதன் அவதானிப்புகளுக்கும் மற்றும் பணிப்புரைகளுக்கும் இணங்க உள்ளகக் கணக்காய்வாளருக்கு எதிராக சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டு பற்றி விசாரணை செய்யப்பட்டு அது தொடர்பில் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு **ஒக்டோ**பர் மாதம் நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக்கு 367 ஆம் இலக்க சபைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கையின் நிமித்தம் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர்கள் சபையினது தீர்மானத்தின் பிரகாரம் இவருக்கு ஒரு கண்டித்தல் கடிதத்தை விநியோகித்து அதன் ஒரு பிரதியை இவரின் தனியாள் கேவையில் சேர்க்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம், தேவையயான நடவடிக்கையை மேற்கொண்டு, இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. முன்னர் போல் இவரினால் குறித்த கணக்காய்வு விசாரணை விடயங்கள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| 03 | <u>வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களை பெற்ற நபர்களினால் உரிய ஒப்பந்தங்கள் மீறப்பட்டமை</u><br><br>வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்பிப்படிப்பு பாடநெறிகளை பின்பற்றிய, உரிய ஒப்பந்தங்களை மீறிய அத்தகைய புலமைப் பரிசில்கள் பெற்றவர்களிடமிருந்து அறவிட வேண்டிய 15,992,125/- ரூபா நிலுவையாக இருக்கின்றமை பற்றி குழு வினவியது. | தற்பொழுது எஞ்சியிருப்பது புலமைப் பரிசில்களை பெற்ற 10 நபர்கள் மாத்திரமே, இவர்களில் இரண்டு நபர்கள் குறித்த கட்டணங்கள் தொடர்பில் ஒரு உடன்பாட்டிற்கு வந்து அந்தக் கட்டணங்களை செலுத்தி வருவதாகவும், மேலும் இரண்டு நபர்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை எடுத்ததையடுத்து நிறுவகத்திற்கு சார்பாக தீர்ப்பு கிடைத்துள்ளதாகவும், எஞ்சியிருக்கின்ற மற்றைய ஆறு நபர்களிடமிருந்தும் உரிய கட்டணங்களை அறவிடும் பொருட்டு உபாய ரீதியான ஒரு முறையை பின்பற்ற எதிர்பார்ப்பதாகவும் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் குறிப்பிட்டார். | வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களைப் பெற்ற 09 நபர்களிடமிருந்து 2018-12-31 ஆம் திகதிற்கு அறவிட வேண்டிய 15,387,897.91 ரூபா நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களைப் பெற்ற இந்த 09 **நபர்களில் 02** நபர்களினது பிணையுத்தரவாதிகளிடமிருந்து அந்தத் தொகை அறவிடப்பட்டு வருகின்றது. வெளிநாட்டுப் புலமைப் பரிசிலைப் பெற்ற ஒருவரான திருமதி ஏ.சி.கே. சேபால தவணைக் கட்டணமாக 2018 ஆம் ஆண்டு **ஜ**னவரி மாதம் வரை குறித்த கட்டணத்தை செலுத்தியுள்ளார். எஞ்சிய கட்டணத்தை அறிவிடும் பொருட்டு சட்டமா அதிபரின் மூலமாக திருமதி ஏ.சி.கே. சேபால என்பவருக்கு ஒரு நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>திரு காமினி விக்ரமசிங்க என்பவரிடமிருந்து 5,226,878.10 ரூபா அத்தகைய வெளிநாட்டுப் புலமைப் பரிசில் கடனை அறவிடும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் இந்த நிறுவகத்திற்கு சார்பான ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதித் தொகையை இவரிடமிருந்து அறிவிடும் பொருட்டு ஒரு ரிட் ஆணையை பிறப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களைப் பெற்ற இந்தக் கடனாளிகளின் விபரங்களை உள்ளிட்டு ஒரு செய்திப் பத்திரிகை விளம்பரத்தை விடுப்பதற்கு பணிப்பாளர்கள் சபையின் 370-வது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 04 | <u>பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லம் ஒரு வெளித் தரப்பு நபரினால் பாவிக்கப்படுதல்</u><br><br>பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லம், அதன் வாடகைக் கட்டணம் அறவிடப்படாமலும் மற்றும் அனுமதியின்றி வெளித் தரப்பு நபர் ஒருவருக்கு வதிவதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமை பற்றி குழு வினவியது.<br><br>2015 ஆம் ஆண்டு பணிப்பாளர் குறித்த உத்தியோகபூர்வ இல்லத்தில் வதியாததன் காரணத்தினால், அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர் ஒருவருக்கு தற்காலிகமாக இந்த இல்லம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கெனவே இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் குறிப்பிட்டார். | கூடுமான விரைவில் இந்த நிலைமையை சீர்செய்து கொள்ளல். | பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்த வெளித் தரப்பு நபர் தற்பொழுது அதிலிருந்து வெளியேறியுள்ளார். அவர் வசித்திருந்த காலப் பகுதிற்குரிய வீட்டு வாடகை, தொலைபேசிக் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள் மற்றும் தண்ணீர் கட்டணங்கள் முதலிய சகல கட்டணங்களும் அறவிடப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 05 | <u>கணனிகளின் கொள்வனவு</u><br><br>1.7 மில்லியன் ரூபா நிதியை செலவிட்டு, தொழில் நுட்ப குழு நிராகரித்த ஒரு நிறுவனத்திடமிருந்து 2015 ஆம் ஆண்டிலும் 17 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டமை, அந்தக் கணனிகளின் பழுதுகள், சேவை ஒப்பந்தங்களின் பிரகாரம் உரிய கால நேரத்தில் சேவிஸ் சார்ந்த சேவைகள் வழங்கப்படாமை என்பன பற்றி குழு வினவியது.<br><br>நிறுவகத்தின் பதிவாளரினது சிபாரிசின் பேரில் இந்தக் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் குறிப்பிட்டார்.<br><br>நிறுவகத்தில் ஒரு தொழில் நுட்பக் குழு இருந்தும், ஒரு வெளித் தரப்பின் மூலமாக இந்தக் கொள்வனவு செய்தமை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டதில் குழு அதிருப்தியை தெரிவித்தது.<br><br>எதிர்காலத்தில் இவ்வாறான ஒரு நிலை ஏற்படாது என அமைச்சின் செயலாளர் பொறுப்புடன் தெரிவித்தார். | இது பற்றிய ஒரு அறிக்கையை 02 வாரங்களுக்குள் குழுவுக்கு சமர்ப்பித்தல். | திணைக்களத்தின் கொள்வனவு பற்றிய குழுவினது சிபாரிசின் பேரில் இந்தக் **கணணிகள்** கொள்வனவு **செய்யப்பட்டுள்ளது**. பெறுகை வழிகாட்டல் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய கொள்வனவு விடயங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 06 | <u>**சேதனப்** பசளைப் பாவனை</u><br><br>ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் விவசாய ஆராய்ச்சிகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதாகவும், விவசாயத் திணைக்களத்தின் மூலம் தொழில் நுட்ப ஆராய்ச்சிகள் | | ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் கமநல மற்றும் கிராமிய அபிவிருத்தி பிரிவுகளில் சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஒரு நிறுவனமாகும். ஆகையால், இந்த |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படுவதாகவும், ஏற்கெனவே **சேதனப்பசளைகளுடன் குறைவான கோனப் பசளைகளை சேர்த்து பாவிப்பது தொடர்பான விழிப்புணர்வு விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும்** விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.<br><br>படிப்படியாக விவசாயிகள் இரசாயனப் பசளையின் பாவனையிலிருந்து விலகி **சேதன** பசளைகளையின் பாவனைக்கு பரிட்சயப்படுத்தும் பொருட்டு விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். | | நிறுவகம் விவசாய தொழில் நுட்ப ஆராய்ச்சிகளை (Technical Research) மேற்கொள்வதில்லை.<br><br>காபன் பசளைப் பிரிவு தொடர்பான மூன்று சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகள் இந்த நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.<br><br>அந்த ஆராய்ச்சிகளின் தலைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.<br><br>1. காபன் பசளையின் பாவனையிலுள்ள சாத்தியமும் பிரச்சினைகளும் : சிங்கள ஆராய்ச்சி அறிக்கை - 2009<br><br>2. காபன் பசளை உற்பத்தியும் பாவனையும்: சிங்கள ஆராய்ச்சி அறிக்கை - 2012<br><br>3. மாநகர திண்மக் கழிவுகள் மூலமான உரம்: சாத்தியங்களும் மட்டுப்பாடுகளும்: ஆங்கில ஆராய்ச்சி அறிக்கை - 2015 |